**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு.**

முன்னிலை. திரு.S.R.பாபு B.A., B.L.

நீதித்துறை நடுவர் எண்.3, ஈரோடு.

2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1–ம் நாள் சனிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.421/2026**

**CNR No–TNED 04–002944–2026**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசு தரப்பில் காவல் உதவி ஆய்வாளர்,<br>சித்தோடு காவல் நிலையம்.<br>ஈரோடு<br>குற்ற எண்.451/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | காளியப்பன், வயது 37/2026,<br>த/பெ.நைனார்,<br>வண்டிக்காரன் தெரு, நாங்குநேரி தாலுக்கா,<br>திருநெல்வேலி மாவட்டம். |
| வனையப்பட்ட குற்றங்கள் | : | U/s. 331(4), 305(a) of BNS |
| குற்றம் நிகழ்ந்த நாள் | : | 21.09.2025 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 22.09.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | : | 15.12.2025– தற்போது நீதிமன்ற காவலில் உள்ளார் (230 நாட்கள்) |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | தற்போது நீதிமன்ற காவலில் உள்ளார். |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 13.05.2026 |
| BNSS பிரிவு 263–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 22.05.2026 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | : | 28.07.2026 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | : | 28.07.2026 |
| BNSS பிரிவு 348–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | : | Nil |
| BNSS .பிரிவு.351(1)(ஆ)–இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 01.08.2026 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த | : | இல்லை |



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.01 15:33:53 +0530

| | | |
|---|---|---|
| விவரம் | | |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | : | இல்லை |
| வழக்கு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்ட நாள் | : | 01.08.2026 |
| தீர்ப்பு பகரப்பட்ட நாள் | : | 01.08.2026 |
| தீர்மானம் | : | எதிரி BNS பிரிவுகள் 331(4), 305(a)-ன் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. |
| முடிவு | : | இறுதியாக, இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட 331(4), 305(a) - ஆகிய BNS சட்டப்பிரிவின் கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்து,<br>எதிரிக்கு BNS பிரிவு 331(4)-ன் கீழான குற்றத்திற்கு எட்டு மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் மற்றும் அபராதம் ரூ.100/- விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் மேலும் ஒரு மாதம் சிறைத்தண்டனை விதித்தும்,<br>BNS பிரிவு 305(a)-ன் கீழான குற்றத்திற்கு எட்டு மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் மற்றும் அபராதம் ரூ.100/- விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் மேலும் ஒரு மாதம் சிறைத்தண்டனை விதித்தும், BNSS 271(2) பிரிவின் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி மேற்படி தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது.<br>மேலும், எதிரி கடந்த 15.12.2025 முதல் 01.08.2026 (தற்போது வரை) வரையிலான 230 நாட்கள் சிறையில் இருந்துள்ள நிலையில், அவர் சிறையிலிருந்த நாட்களை தண்டனை காலத்திலிருந்து BNSS பிரிவு 468-ன் கீழ் கழித்து உத்தரவிடப்படுகிறது. (மொத்த அபராதம் ரூ.200/-).<br>எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் PR No. 29/2026-ல் |



S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.08.01 15:33:58 +0530

| | | |
|---|---|---|
| | | தாக்கல்செய்யப்பட்டுள்ள அ.த.சா.பொ.1—ஐ அதன் உரிமையாளரான அ.சா.1—ன் வசம் ஒப்படைக்கவும், அவர் பெற்றுக்கொள்ள தவறும் பட்சத்தில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் அரசுக்கு ஆதாயமாக்கவும் உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கு 1305.2026 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிக்காக J.கவிதா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

<u>**தீ ர் ப் பு ரை**</u>

<u>**சித்தோடு காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையின் விவரம்:**</u>

1. கடந்த 20.09.2025—ம் தேதி சித்தோடு காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட லட்சுமி நகர் பவிஷ்பார்க் அருகில் வாதி கோபிநாத் Drive in Car Decors என்ற பெயரில் ஷோரூம் கடையை நடத்தி வருகிறார் என்றும், வாதி தனது கடையின் கல்லாப்பெட்டியில் பணம் ரூ.54,500/—யை வைத்துவிட்டு மேற்படி கையின் சட்டறை 20.09.2025—ம் தேதி இரவ 10.00 மணிக்கு மூடி பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்றுள்ளார் என்றும், மேற்படி நிகழ்வின் தொடர்வாக எதிரி காளியப்பன் என்பவர் திருட வேண்டும் என்ற உட்கருத்தோடு வாதி பூட்டிவிட்டு சென்ற கடையின் சட்டறை 21.09.2025—ம் தேதி அதிகாலை 03.15 மணிக்கு உடைத்து அத்துமீறி உள்ளே நுழைந்து வாதி கோபிநாத் தன் கடையின் கல்லாப்பெட்டியில் வைத்திருந்த பணம் ரூ.54,500/— சாட்சியின் சம்மதம் இல்லாமல் சுயலாபம் அடையவேண்டும் என்ற நோக்கத்தோடு நேர்மையின்றி திருடிச்சென்றுள்ளார் என்ற குற்றத்திற்காக எதிரி மீது சித்தோடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் BNS பிரிவுகள் 331(4), 305(a)—ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.01 15:34:02 +0530

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி குற்ற அறிக்கையை நன்கு பரிசீலித்து எதிரி மீது BNS பிரிவுகள் 331(4), 305(a)–ன் படி வழக்கினை கோப்புக்கு எடுத்துக் கொண்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் BNSS பிரிவு 230–ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது BNS பிரிவுகள் 331(4), 305(a)–ன் படி குற்றச்சாட்டுகளுக்கான முகாந்திரம் இருப்பது பற்றி BNSS பிரிவு 263–ன் கீழ் எதிரியிடம் BNS பிரிவுகள் 331(4), 305(a)–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி குற்றத்தினை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அரசு தரப்பு சான்று பொருள் அ.த.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி 2, 3, 5, 6, 8, 10 ஆகியோர்களை அரசு தரப்பில் விசாரிக்காமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது.

6. **அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சியங்களின் வாயிலாக புலப்படும் வாதத்தின் சுருக்கம்**

6.1) அ.சா.1 திரு.கோபிநாத், தனது சாட்சியத்தில், கடந்த 20.09.2025 ஆம் தேதி காலை வழக்கம் போல் கார் டெக்கர்ஸ் கடையை திறந்து வேலை செய்துவிட்டு அன்று வியாபாரம் செய்த பணம் எவ்வளவு ரூ.54,500/–ஐ கல்லாப்பெட்டியில் வைத்துவிட்டு இரவு 10.00 மணியளவில் கார் டெக்கர்ஸ் கடையின் ஷட்டரை பூட்டி விட்டு வீட்டிற்கு சென்று விட்டேன் என்றும், பின்பு மறுநாள் 21.09.2025 ஆம் தேதி நேரம் சரியாக தெரியவில்லை 10.00 க்கு மேல் தான் கடைக்கு சென்று பார்த்தபோது தனது கடைசி சட்டர் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது என்றும், நான் உடனே உள்ளே சென்று கடையின் கல்லாப்பெட்டியை பார்த்தபோது திறந்த நிலையில் இருந்தது என்றும், அதில்


S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.01 15:34:06 +0530

இருந்த ரூ.54,500/-ம் பணம் திருடு போயிருந்தது என்றும், பின்பு இது சம்பந்தமாக அக்கம் பக்கத்தில் இருந்தவர்களிடம் விசாரித்தேன் என்றும், பின்பு தன்னுடைய கடையில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராவை பரிசோதித்து பார்த்தேன் என்றும், அப்போது தனது கடையின் பூட்டை ஒரு நபர் உடைத்து கல்லாவில் இருந்த பணத்தை திருடிச் சென்றுள்ளது பதிவாகி இருந்தது என்றும், மறுநாள் 22.09.2025 ம் தேதி சென்று புகார் (அ.த.சா.ஆ.1) அளித்தேன் என்றும், பின்பு PEN DRIVE(அ.த.சா.பொ.1)ல் பதிவு செய்யப்பட்டிருந்த காட்சிகளுடன் அந்த PEN DRIVE வையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றும், பின்பு 15.12.2025 ஆம் தேதி காவல் நிலையத்திலிருந்து தன்னை தொடர்பு கொண்டு கடையில் பணத்தை திருடிய நபரை கைது செய்து சித்தோடு காவல் நிலையத்திற்கு அழைத்து வந்திருப்பதாக கூறினார்கள் என்றும், அதன் பேரில் தான் அன்றைய தினம் மாலை சித்தோடு காவல் நிலையம் சென்றேன் அப்போது சித்தோடு காவல் நிலையத்தில் பாதுகாப்பிலிருந்த நபரை என்னிடம் அடையாளம் காட்டி காளியப்பன் இவர்தான் அன்று என் கடையின் பூட்டை உடைத்து தன்னுடைய கடையின் கல்லாப்பெட்டியில் இருந்த ரூ.54,500/-யை திருடிய நபர் என்று சொன்னார் என்றும், அப்பொழுது எதிரியும் அதை ஒப்புக்கொண்டார் என்றும், பின்பு அந்த PEN DRIVE ஐ என்னிடம் இருந்து போலீசார் படிவம் 91-ல் கைப்பற்றினர் என்றும், படிவம் 91-ல் சாட்சி கையொப்பம் (அ.தசா.ஆ.2) தன்னுடையதுதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 திரு.சுரேஷ்பாபு, தனது சாட்சியத்தில், பார்வை மகஜரில் (அ.த.சாஆ.3) உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், இரண்டாவது சாட்சி கையொப்பம் உதயகுமார் என்பவருடைது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 திரு.பாலமுருகன், தனது சாட்சியத்தில், தனது கடைக்கு இரண்டு கடை தள்ளிதான் டிரைவ் இன் கார் டெக்கர்ஸ் கடை இருக்கிறது என்றும், அந்த கடையில் 20.09.2025 ஆம் தேதி இரவு 10.00 மணிக்கு மேல்ஷெட்டரின் பூட்டை உடைத்து கல்லாவில் வைத்திருந்த ரூ.54,500/-ஐ திருடு போனது சம்பந்தமாக அந்த கடையின் உரிமையாளர் கோபிநாத் தனக்கு 21.09.2025 ஆம் தேதி பகல் 12.00 மணிக்கு



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.01 15:34:11 +0530

இதைப்பற்றி தனக்கு தகவல் சொன்னார் என்றும், அப்போது தான் கோபிநாத்தின் டிரைவ் இன் கார் டெக்கர்ஸ் கடைக்குள் சென்று அங்கிருந்த சிசிடிவி கேமரா காட்சியை பார்த்தேன் அதில் ஒரு நபர் கடையின் ஷட்டரை உடைத்து உள்ளே வந்து கல்லாப்பெட்டியில் உள்ள பணத்தை எடுப்பதை பார்த்தேன் என்றும், இது சம்பந்தமாக காவல் நிலையத்திலிருந்து வந்து இரண்டு மூன்று தடவை என்னை விசாரணை செய்தனர் என்றும், பின்பு 14.12.2025 ஆம் தேதி சித்தோடு காவல் நிலையத்திலிருந்து தனக்கு போன் மூலம் அன்று டிரைவ் இன் கார் டெக்கர்ஸ் கடையில் திருடிய நபரை காவல்நிலையத்தில் வைத்திருப்பதாகவும், ஸ்டேஷனுக்கு வந்து சிசிடிவி பார்த்த நபர் இவர் தானா என்று அடையாளம் காண்பிக்கும்படி தன்னை ஸ்டேஷனுக்கு வர சொன்னார்கள் என்றும், பின்பு 15.12.2025 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு மேல் சித்தோடு காவல் நிலையம் சென்றேன் என்றும், பின்னர் சிசிடிவி கேமராவில் தான் பார்த்த நபர் தான் ஸ்டேஷனில் இருக்கும் நபர் என்று அடையாளம் காட்டினேன் என்றும், பின்பு எதிரி தான் 20.09.2025 ஆம் தேதி அன்று இரவு 10.00 மணிக்கு மேல் டிரைவ் இன் கார் டெக்கர்ஸ் கடையில் பூட்டை உடைத்து திருடியதாக ஒப்புக்கொண்டார் அதனை தானும், தன்னுடன் இருந்த மணிகண்டனும் பார்த்தோம் அதை போலீசார் பதிவு செய்தனர் என்றும், காளியப்பன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தில உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் (அ.த.சா.ஆ.4) தன்னுடையதுதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.4) அ.சா.4 திரு.பன்னீர்செல்வம், தனது சாட்சியத்தில், கடந்த 22.09.2025ம் தேதி 10.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் என்பவர் நிலையை அலுவலில் இருந்தபோது கோபிநாத் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண் 451/2025 சட்டப்பிரிவு 331(4), 305(a) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கையை (அ.த.சா.ஆ.5) பதிவு செய்தார் என்றும், பின்பு அன்றைய தினமே இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சுரேஷ் பாபு மற்றும் உதயகுமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் (அ.த.சா.ஆ.6) தயார் செய்து பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.01 15:34:16 +0530

என்றும், புலன் விசாரணை மேற்கொண்டதில் கடந்த 17.11.2025-ம் தேதி சேலம் மாவட்டம் சூரமங்கலம் காவல் நிலைய குற்ற எண் 532/2025 சட்டப்பிரிவுகள் 331(4), 305(a) வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரி காளியப்பன், த/பெ.நயினார் என்பவர் மேற்படி வழக்கத்திற்காக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சித்தோடு காவல் நிலைய குற்ற எண் 451/2025 வழக்கின் குற்ற சம்பவத்திலும் ஈடுபட்டதாக தெரிவித்ததன் அடிப்படையில் பவானி உட்கோட்ட துணைக் காவலர் கண்காணிப்பாளர்களின் உத்தரவின் பேரில் சேலம் மத்திய சிறையில் இருந்து வந்த எதிரி காளியப்பன் என்பவரை 24.11.2025 தேதி காலை 11:30 மணிக்கு சேலம் மத்திய சிறையில் வைத்து சிறை கண்காணிப்பாளர்கள் அவர்கள் முன்னிலையில் சம்பிரதாய கைது செய்து பின்னர் கனம் நீதித்துறை நடுவர் எண். 3 ஈரோடு அவர்களது முன்பு 15.12.2025 ஆம் தேதி பிடி வாரண்டியில் ஆஜர் செய்து ஒரு நாள் போலீஸ் காவல் பெறப்பட்டது என்றும், பின்பு மணிகண்டன் மற்றும் பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் 15.12.2025 ஆம் தேதி பிற்பகல் 15.30 மணி முதல் 16.30 மணி வரை எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று பின்பு வாதி காவல் நிலையத்தில் ஒப்படைத்த சம்பவ இடத்தில் பதிவாகி இருந்த சிசிடிவி கேமரா காட்சி அடங்கிய Pendrive ஐ பெற்று படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்பு ஒரு நாள் போலீஸ் காவல் முடித்து அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார் என்றும், பின்பு தனது புலன் விசாரணை முடித்து உதவி ஆய்வாளர் பாஸ்கர் என்பவரிடம் ஒப்புவித்தேன். அவர் அவரது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 331(4), 305(a) இதச பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிவடைந்தது.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவடைந்த பிறகு எதிரிக்கு பாதகமாக தோன்றக் கூடிய அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(b)-ன் கீழ் தொகுத்து வினவிய போது எதிரி அதனை ஒப்புக்கொண்டு. எதிரி தம்மிச்சையாக குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்துள்ளார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென கூறியதால், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாமல் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.01 15:34:20 +0530

8. தற்பொழுது இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

9. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அரசு தரப்பஹ சான்றுபொருள் அ.த.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி 2, 3, 5, 6, 8, 10 ஆகியோர்களை அரசு தரப்பில் விசாரிக்காமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்</u>:

10. இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

11. இனி இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினையானது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் தகுநிலை ஐயப்பாட்டிற்கப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

12. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரைலியான சாட்சிகள் மூலமாகவும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அரசு தரப்பு சான்று பொருள் அ.த.சா.பொ.1 மூலமாகவும் அரசுதரப்பு தன் வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

13. இவ்வழக்கில் புகார்தாரர் கோபிநாத் அ.சா.1 ஆகவும், பார்வை மகஜர் சாட்சி அ.சா.2 ஆகவும், ஒப்புதல் வாக்குமூல சாட்சி அ.சா.3 ஆகவும், முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரி அ.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

14. எதிரி மீதான BNS பிரிவுகள் 331(4), 305(a)–ன் கீழான குற்றம் குறித்து



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.01 15:34:24 +0530

பரிசீலிக்கும்போது, அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 20.09.2025-ம் தேதி சித்தோடு காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட லட்சுமி நகர் பவிஷ்பார்க் அருகில் வாதி கோபிநாத் Drive in Car Decors என்ற பெயரில் ஷோரூம் கடையை நடத்தி வருகிறார் என்றும், வாதி தனது கடையின் கல்லாப்பெட்டியில் பணம் ரூ.54,500/-யை வைத்துவிட்டு மேற்படி கையின் சட்டறை 20.09.2025-ம் தேதி இரவ 10.00 மணிக்கு மூடி பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்றுள்ளார் என்றும், மேற்படி நிகழ்வின் தொடர்வாக எதிரி காளியப்பன் என்பவர் திருட வேண்டும் என்ற உட்கருத்தோடு வாதி பூட்டிவிட்டு சென்ற கடையின் சட்டறை 21.09.2025-ம் தேதி அதிகாலை 03.15 மணிக்கு உடைத்து அத்துமீறி உள்ளே நுழைந்து வாதி கோபிநாத் தன் கடையின் கல்லாப்பெட்டியில் வைத்திருந்த பணம் ரூ.54,500/- சாட்சியின் சம்மதம் இல்லாமல் சுயலாபம் அடையவேண்டும் என்ற நோக்கத்தோடு நேர்மையின்றி திருடிச்சென்றுள்ளார் என்பதேயாகும்.

15. எதிரி மீதான BNS பிரிவுகள் 331(4), 305(a)-ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்கும் போது, மேற்படி அரசுத்தரப்பு சாட்சிகளை எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்த போதிலும், இவ்வழக்கு குற்றத்தை எதிரி தம்மிச்சையாக ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்துள்ளார். அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களிலிருந்தும், ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் குறித்து நிரூபிக்கப்பட தேவையில்லை என்பதன் அடிப்படையிலும், எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் இவ்வழக்கில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

16. இவ்வழக்கின் எதிரி BNS பிரிவுகள் 331(4), 305(a)-ன் கீழ் குற்றவாளி என முடிவுசெய்யப்பட்டுள்ளதால், அவருக்கு வழங்கப்போகும் தண்டனை குறித்து கேட்டபோது,

> "சிறையிலிருந்த நாட்களை தண்டனையாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

என்று கூறினார். மேற்படி எதிரியின் வயது, உடல் நிலை மற்றும் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அவருக்கு குறைந்த பட்ச தண்டனை வழங்கலாம்


S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.01 15:34:29 +0530

என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. இறுதியாக, இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட 331(4), 305(a)–ஆகிய BNS சட்டப்பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்து,

எதிரிக்கு BNS பிரிவு 331(4)–ன் கீழான குற்றத்திற்கு எட்டு மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் மற்றும் அபராதம் ரூ.100/– விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் மேலும் ஒரு மாதம் சிறைத்தண்டனை விதித்தும்,

BNS பிரிவு 305(a)–ன் கீழான குற்றத்திற்கு எட்டு மாதம் மெயக்காவல் சிறைதண்டனை விதித்தும் மற்றும் அபராதம் ரூ.100/– விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் மேலும் ஒரு மாதம் சிறைத்தண்டனை விதித்தும், BNSS 271(2) பிரிவின் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி மேற்படி தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது.

மேலும், எதிரி கடந்த 15.12.2025 முதல் 01.08.2026 (தற்போது வரை) வரையிலான 230 நாட்கள் சிறையில் இருந்துள்ள நிலையில், அவர் சிறையிலிருந்த நாட்களை தண்டனை காலத்திலிருந்து BNSS பிரிவு 468–ன் கீழ் கழித்து உத்தரவிடப்படுகிறது. (மொத்த அபராதம் ரூ.200/–).

18. எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

19. இவ்வழக்கில் PR No. 29/2026–ல் தாக்கல்செய்யப்பட்டுள்ள அ.த.சா.பொ.1–ஐ அதன் உரிமையாளரான அ.சா.1–ன் வசம் ஒப்படைக்கவும், அவர் பெற்றுக்கொள்ள தவறும் பட்சத்தில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் அரசுக்கு ஆதாயமாக்கவும் உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.01 15:34:33 +0530

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.08.01 15:34:39 +0530

நீதித்துறை நடுவர் எண்.3,
ஈரோடு.

**இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| அரசு தரப்பு சாட்சி எண். | பெயர் | எவ்வகையான சாட்சி |
|---|---|---|
| அ.சா.1 | திரு. கோபிநாத் | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. சுரேஷ்பாபு | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.3 | திரு.பாலமுருகன் | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.4 | திரு. பன்னீர்செல்வம்,<br>உதவி ஆய்வாளர். | முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| அரசு தரப்பு சான்றாவணம் எண். | எவ்வகை ஆவணம் | யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 22.09.2025–ம் தேதியிட்ட புகார் | அ.சா.1 |
| அ.த.சா.ஆ.2 | 22.09.2025–ம் தேதியிட்ட படிவம் 91–ல் உள்ள அ.சா.1 சாட்சி கையொப்பம் | அ.சா.1 |
| அ.த.சா.ஆ.3 | 22.09.2025–ம் தேதியிட்ட பார்வை மகஜர் | அ.சா.2 |
| அ.த.சா.ஆ.4 | 15.12.2025–ம் தேதியிட்ட காளியப்பன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 சாட்சி கையொப்பம் | அ.சா.3 |
| அ.த.சா.ஆ.5 | 22.09.2025–ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ.த.சா.ஆ.6 | 22.09.2025–ம் தேதியிட்ட மாதிரி வரைபடம் | அ.சா.4 |

**அரசு தரப்பு சான்ற பொருள்:–**

| அரசு தரப்பு சான்று பொருள் எண். | எவ்வகை சான்று பொருள் | யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| அ.த.சா.பொ.1 | பென்டிரைவ்–1 | அ.சா.1 |

| |
|---|
| **<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u> :–** இல்லை |
| **<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u> :–** இல்லை |
| **<u>குறிப்பு:–</u>** |
| 1) விசாரணை காலத்தில் எதிரி நீதிமன்றக் காவலில் இருந்துள்ளார். |
| 2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை. |
| 3) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.<br>S R BABU Digitally signed by S R BABU Date: 2026.08.01 15:34:46 +0530<br>நீதித்துறை நடுவர் எண்.3,<br>ஈரோடு. |